## யூன் – 06 - செவ்வாய்

### புனித நோபேட்

### கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்

### (மாற் 12:17)

## முதல் வாசகம் : தோபித்து 2 : 9 - 14

அக்காலத்தில் தோபித்து கூறியது: அன்று இரவு குளித்துவிட்டு என் வீட்டு முற்றத்தின் சுவர் அருகில் படுத்து உறங்கினேன். வெப்பமாக இருந்ததால் என் முகத்தை மூடவில்லை. என் தலைக்குமேல் சுவரில் குருவிகள் இருந்தது எனக்குத் தெரியாது. அவற்றின் சூடான எச்சம் என் கண்களில் விழுந்தது. உடனே கண்களில் வெண்புள்ளிகள் தோன்றின. நலம் பெறுமாறு மருத்துவர்களிடம் சென்றேன். அவர்கள் எவ்வளவோ மருத்துவம் செய்தும் வெண்புள்ளிகளால் என் பார்வை குன்றி வந்தது. இறுதியாகப் பார்வையை முற்றும் இழந்தேன். நான் பார்வையற்றவனாக நான்கு ஆண்டுகள் வாழ்ந்தேன். என் உறவின் முறையார் அனைவரும் எனக்காக வருந்தினர். எலிமாய் செல்லும் வரை இரண்டு ஆண்டுகளாக அகிக்கார் என்னைப் பேணிவந்தான். அக்காலத்தில் என் மனைவி அன்னா பெண்களுக்குரிய கை வேலைகளில் ஈடுபட்டிருந்தாள். தன் கைவேலைப்பாடுகளை அவள் உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்க, அவர்கள் அவளுக்குக் கூலி கொடுப்பார்கள். திசித்தர் மாதம் ஏழாம் நாள் தான் நெய்திருந்ததை உரிமையாளர் களுக்கு அவள் அனுப்பி வைத்தாள். அவர்கள் அவளுக்கு முழுக்கூலியுடன், விருந்து சமைக்க ஓர் ஆட்டுக்குட்டியையும் கொடுத்தார்கள். அவள் திரும்பி வந்தபொழுது ஆட்டுக்குட்டி கத்தத் தொடங்கியது. உடனே நான் அவளை அழைத்து, "இந்த ஆட்டுக்குட்டி எங்கிருந்து வந்தது?" என்று கேட்டேன். "ஒருவேளை இது திருடப்பட்டதோ? அப்படியானால் உரியவரிடம் இதைத் திருப்பிக் கொடுத்துவிடு ஏனெனில் திருடிய எதையும் உண்ண நமக்கு உரிமை இல்லை" என்றேன். அதற்கு அவள் என்னிடம், "கூலிக்கு மேலாக இது எனக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டது" என்றாள். இருப்பினும் நான் அவளை நம்பவில்லை. உரியவருக்கு அதைத் திருப்பிக் கொடுத்துவிடுமாறு வற்புறுத்தி னேன். அவளது செயலைக் குறித்து நான் நாணினேன். அப்பொழுது அவள் மறுமொழியாக என்னிடம், "உம்முடைய தருமங்கள் எங்கே? நற்செயல்கள் எங்கே? உம்முடைய குணம் இப்பொழுது நன்றாகவே புலப்படுகிறது!" என்றாள்.

**பதில்பாடல் :** ஆண்டவரில் நம்பிக்கை கொள்வேர் இதயம் உறுதியாய் இருக்கும்

## நற்செய்தி : மாற்கு 12 : 13 - 17

அக்காலத்தில் பரிசேயர் இயேசுவை அவருடைய பேச்சில் சிக்கவைக்க ஏரோதியர் சிலரை அவரிடம் அனுப்பி வைத்தனர். அவர்கள் அவரிடம் வந்து, "போதகரே, நீர் உண்மையுள்ளவர் ஆள் பார்த்துச் செயல்படாதவர் எவரையும் பொருட்படுத்தாமல் கடவுளின் நெறியை உண்மைக்கு ஏற்பக் கற்பிப்பவர் என்பது எங்களுக்குத் தெரியும். சீசருக்கு வரிசெலுத்துவது முறையா, இல்லையா? நாங்கள் செலுத்தவா, வேண்டாமா?" என்று கேட்டார்கள். அவர் அவர்களுடைய வெளிவேடத்தைப் புரிந்து கொண்டு, "ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? என்னிடம் ஒரு தெனாரியம் கொண்டுவாருங்கள். நான் பார்க்க வேண்டும்" என்றார். அவர்கள் அதைக் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம், "இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?" என்று கேட்டார். அவர்கள் அவரிடம், "சீசருடையவை" என்றார்கள். அதற்கு இயேசு அவர்களை நோக்கி, "சீசருக்கு உரியவற்றைச் சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்" என்றார். அவர்கள் அவரைக் குறித்து வியப்படைந்தார்கள்.

**தியானம்:** சோதனை என்பது பல வடிவங்களில், பல இடங்களில் இருந்து வரலாம். அவற்றை எதிர் கொள்வது பெரும் சவாலாகத்தான் இருக்கும். சோதிக்கப்படுவதும், சோதனை செய்வதும் எளிதான காரியம் அல்ல. நற்செய்தியில் யேசுவும் தலைவர்களால் சோதிக்கப்படுகிறார். அவரை எப்படியாவது சிக்கலில் மாட்டிவிட வேண்டும் என்பதே சமுதாயத்தலைவர்களின் நோக்கமாக இருந்தது. இயேசு ஒடுக்கப்பட்டோரின், சிறுமைப்படுத்தப்பட்டோரின், ஏழைகளின் தோழனாகவும், மதத்தலைவர்களின் அடக்கு முறையை, வெளி வேடத்தை விமர்சிப்பதால், அவர்களின் எதிரியாகவும் பார்க்கப்பட்டார். தோழமை தொண்டு செய்வதில் துலங்க வேண்டும் என்பதன் அடையாளமாக யேசு வாழ்ந்தார். கடவுளுக்கு உரியதை செய்தார், அவர் சித்தப்படி செயற்பட்டார். முதல் வாசகத்தில் தோபித்து பார்வையை இழந்தாலும், எவ்வாறு கடவுளுக்கு ஏற்ற மகனாக வாழ்ந்தாரோ அவ்வாறு நாமும் வாழ அழைக்கப் பட்டுள்ளோம்.